# KUMBHAT FINANCIAL SERVICES LIMITED

(CIN: L65991TN1993PLC024433)

To

Date: 18.07.2022

**The Manager**
Department of Corporate Services
BSE Ltd.
Dalal Street, Fort
Mumbai – 400 001

**Sub. - : Submission of the Notice of 30th Annual General Meeting in Newspapers**
**Ref. - Scrip Code - 526869**

Sir / Madam,

Kindly find the notice of our 30th Annual General Meeting published in two newspapers one in English and one in Vernacular.

Kindly take the same on your record.

Thanking you,

Yours faithfully,

**For Kumbhat Financial Services Limited**

**Sanjay Kumbhat**
Managing Director
DIN: 03077193

Encl: as above

# சிம்ஸ் மருத்துவமனையில் முதியோர், மார்பக, புரோஸ்டேடிக் சிகிச்சைக்கான 3 புதிய கிளினிக்

## எஸ்ஆர்எம் குழும தலைவர் ரவிபச்சமுத்து திறந்து வைத்தார்

**சென்னை, ஜூலை 17–**

**சென்னையின் முன்னணி பன்னோக்கு சிறப்பு மருத்துவ மனையான சிம்ஸ் மருத்துவமனை 3 புதிய கிளினிக்குகளை அறிமுகம் செய்துள்ளது.**




முதியோர்களுக்கான சிறப்பு சிகிச்சை அளிக்க சிம்ஸ் முதுமை கிளினிக், பெண்களுக்ளு மார்பகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு சிகிச்சை அளிக்க சிம்ஸ் பதுமை, ஆண்களின் சிறுநீர் பையை சுற்றி உள்ள புரோஸ்டேடிக் சுரப்பி தொடர்பான பிரச்சினைகளுக்கு சிகிச்சை அளிக்கும் புராஸ்டேட் கிளினிக் ஆகிய 3 புதிய கிளினிக்குகளை திறந்துள்ளது. இந்த 3 கிளினிக்குகளையும் எஸ்ஆர்எம் குழுமத்தின் தலைவர் ரவி பச்சமுத்து திறந்து வைத்தார்.

சிம்ஸ் முதுமை கிளினிக், முதியோர்களின் தனித்துவமான மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு முதியோர்களின் நோய்கள் குறித்து விரிவான மதிப்பீடு செய்து, தனித்துவமான பராமரிப்பு திட்டங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் என அவர்களின் முழு உடல்நலத்தையும், வாழ்வையும் பாதுகாப்பதற்கு தேவையான நன்கு பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்கள் குழு உள்ளது.

சிம்ஸ் பதுமை கிளினிக் மார்பகம் ரீதியான பிரச்சினை உள்ள அனைவருக்கும் தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்கும். பல்துறைகளை உள்ளடக்கிய குழு, மார்பக அறுவை சிகிச்சை நிபுணர்கள், கதிரியக்க வல்லுநர்கள் மற்றும் புற்றுநோயியல் நிபுணர்களை உள்ளடக்கிய குழு நோயாளிகளுக்கு பரிசோதனை மற்றும் நோய் கண்டறிதல் முதல் மறுவாழ்வு வரை ஒட்டுமொத்த பயணம் முழுவதும் மேம்படுத்தப்பட்ட நோய் கண்டறிதல், தனித்துவமான சிகிச்சை திட்டங்கள் மற்றும் சிறந்த ஆதரவை வழங்குகின்றனர்.

சிம்ஸ் ப்ராஸ்டேட் கிளினிக் ஆண்களுக்கு ப்ராஸ்டேட் சுரப்பி தொடர்பான பிரச்சினைக்கு சிகிச்சை, நவீன நோய் கண்டறிதல் சேவை, விரிவுபடுத்தப்பட்ட சிகிச்சை முறைகள், தனித்துவமான பராமரிப்பு உள்ளிட்டவற்றை வழங்குகிறது.

இது குறித்து எஸ்ஆர்எம் குழுமத் தலைவர் டாக்டர் ரவிபச்சமுத்து கூறுகையில், இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில், சிம்ஸ் மருத்துவமனையில் புதிதாக திறக்கப்படும் இந்த 3 கிளினிக்குகளை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சிம்ஸ் முதுமை கிளினிக், சிம்ஸ் பதுமை கிளினிக் மற்றும் சிம்ஸ் ப்ராஸ்டேட் கிளினிக் ஆகியவை, நோயாளிகளுக்கு சிறந்த மற்றும் தனித்துவமான பராமரிப்பை வழங்கும் எங்களது பயணத்தில் மற்றொரு மைல் கல்லாகும். சிறந்த நிபுணர்களின் வழிகாட்டுதலின் படி அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய சிகிச்சையின் காரணமாக நோயாளிகள் தங்களின் நோயில் இருந்து விரைவாக குணமடைய முடியும் என்று தெரிவித்தார்.

இது குறித்து இம்மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பாலமுருகன் கூறுகையில, "இந்த 3 புதிய கிளினிக்குகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிம்ஸ் மருத்துவமனை தொடர்ந்து விரிவான சிறந்த சேவையை வழங்கும் மருத்துவமனை பட்டியலில் முன்னணியில் இருக்கும். நோயாளிகள் தற்போது தங்களின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உங்களின் தனிப்பட்ட தேவைகளை புரிந்துக் கொள்ளக் கூடிய நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் மூலம் பெற்று பலனடையலாம். மேலும் தனித்துவமான சிகிச்சையையும் பெற்றுக் கொள்ளலாம். சமூகத்திற்கு தேவையான சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதில் சிம்ஸ் மருத்துவமனை தொடர்ந்து முன்னிலையில் உள்ளது என்று தெரிவித்தார்.

# சின்னத்திரை நடிகர்களுக்கு இலவச மருத்துவ ஆயுட்கால உறுப்பினர் கார்டு

**சென்னை, ஜூலை 17–**

**சின்னத்திரை நடிகர் சங்கம், ஸ்ரீ லலிதாம்பிகா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பாக சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள ஏ.கே. ஆர். திருமண மண்டபத்தில் மருத்துவ முகாம் நடந்தது. இதில் 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பங்கேற்றனர்.**




சின்னத்திரை நடிகர் நடிகைகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் சார்பில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு 30க்கும் மேற்பட்ட மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஏசி சண்முகம் கலந்து கொண்டு இலவச மருத்துவ ஆயுட்கால உறுப்பினர் கார்டுகளை வழங்கி வாழ்த்திப் பேசினர். சங்கத்தின் தலைவர். கலைமாமணி சிவன் சீனிவாசன் தலைமை தாங்கினார். எம்.ஜி.ஆர். மருத்துவ கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் தலைவர் டாக்டர். அருண்குமார், குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

நடிகர் டி. சிவகுமார் நடிகை எலிசபெத் தமிழ் தாய் வாழ்த்து பாடினர். விழாவிற்கான ஏற்பாடுகளை செயலாளர் போஸ் வெங்கட் சிறப்பாக செய்திருந்தார். பொருளாளர் ஜெயந்த் நன்றி கூறினார். கலைச்செல்வம் கடையம் ஆர்.ராஜு வரவேற்றார்

# முகமது சதக் கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் வரவேற்பு நிகழ்ச்சி

சென்னை, ஜூலை 17–

சென்னை சோழிங்கநல்லூரில் அமைநதுள்ள முகமது சதக் கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக எல்என் ஷீபா லூதர்ஸ் கலந்துகொண்டு, சிறப்புரை ஆற்றினார்.




மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், கழுகு போல் புது பலன் பெற்று வாழ்வில் உயரவேண்டும் என்று சிறப்புரை ஆற்றினார். மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி நல்வழி காட்டும் வகையில் அமைந்தது.

முகமது சதக் அறக்கட்டளையின் சார்பில் தலைவர் எஸ். எம்.முகமது யூசுப் சாகிப், செயலர் ஜனாபா எஸ். எம்.எச். ஷர்மிளா, நிர்வாக இயக்குனர் ஜனாப். பி.ஆர்.எல். ஹமீது இப்ராஹிம், இயக்குனர் எஸ்.எம்.ஏ. ஜே.அப்துல் ஹலீம் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

கல்லூரியின் முதல்வர் இரா. மேகநாதன், துணை முதல்வர் ஓ.எஸ். ஆயிஷா, நிர்வாக மேலாளர் ஜாக்கின் கமலநாதன், IQAC ஒருங்கிணைப்பாளர் டாக்டர் செய்யது அலி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். விழாவில் அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும், கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் சிறப்பாக பணியாற்றினர்.

# அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில் காமராசர் பிறந்த நாள் விழா

சென்னை, ஜூலை 17–

சென்னை சைதாப்பேட்டை அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறையின் சார்பில் காமராசர் பிறந்த நாள் விழா நடைபெற்றது.




அதன் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக அரசால் காமராசர் விருது பெற்ற கல்விக் குழுமத்தின் நிறுவனர் ச.தேவராஜ், துணை நிறுவனர் டெல்பின் தேவராஜ், செயலர் தே. தேவ் ஆனந்த், துணைச் செயலர் ஸ்ரீதேவி தேவ் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு காமராசரின் வாழ்க்கை வரலாற்றின் பற்பல அருஞ்செயல்களையும், தொண்டினையும் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டதுடன் பரிசுகளையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

''காமராஜர் கல்விக்கு ஆற்றிய தொண்டு'' என்னும் தலைப்பில், பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளின் பெயர்ப் பட்டியலை தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ப.த.இராணி வாசித்து வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்த்துறைப் பேராசிரியர் வே.ச.சரவணன் வரவேற்புரையும், நிகழ்ச்சி தொகுப்பை உதவிப் பேராசிரியர் ஆ.கவிதாராணியும், உதவிப்பேராசிரியர் ஆ.அறிவுமொழி நன்றியையும் கூறினார். பல்வேறு துறைசார் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

## கஜேந்திர மோட்சம் : லால்குடி இருந்திருந்தால்... உச்சி முகர்ந்திருப்பார்

# கலைக்காகவே பிறந்தவள்: 16 வயது அதுல்யாவுக்கு ''கலாஷேத்ரா'' ஜனார்த்தனன், விசாகா ஹரி புகழாரம்!

கஜேந்திரன் கருணையோடு கதற, முதலை குரோதத்தோடு இழுக்க, மீண்டும் கஜேந்திரன் கருணையோடு கதற, முதலை குரோதத்தோடு இழுக்க... இரண்டையும் மாறிமாறி காட்டிய பாவங்களில் சிலிர்க்க வைத்து விட்டார் அதுல்யா, மெய் மெய் தான், இதுவே அவரின் அரங்கேற்றத்தின் ஹைலைட்.



★ "திருமலை அப்பனின் அவதாரத்தை அதுல்யா எடுக்கும்போது அவர் அவனுள் (ஆண்டவன்) ஆழ்ந்திருக்க வேண்டும். அந்தத் தோற்றம் கண்டு 3 தடவை ஆனந்தக் கண்ணீர் விட்டேன். அதீத பக்தி பாவம் காட்டி இருப்பது 11ஆம் வகுப்பு படிக்கும் ஒரு பெண்ணுக்கு வயசுக்கு மீறியது. அதுல்யா சிறந்த, மிகச்சிறந்த நடன கலைஞர்கள் வரிசையில் வருவாள்" – இது ஹரிகதா விற்பன்னர் விசாகா ஹரியின் ஆத்மார்த்தமான வாழ்த்துரை (விசாலமான பார்வை).

★ "எதிர்காலத்தில் உலகப் புகழ் பெற்ற பரதக் கவிஞராக அதுல்யா வருவது சாத்தியம், இது சத்தியம். இது விஷயத்தில் அவரை உருவாக்கி இருக்கும் குரு முனைவர் சசிரேகா ராம் மோகனை பாராட்டிக் கொண்டே இருக்கலாம்..."

இது, கலாக்ஷேத்ரா பவுண்டேஷனின் ருக்மணிதேவி நுண்கலைக் கல்லூரியின் ஓய்வு பெற்ற முதல்வர் கலைமாமணி ஏ ஜனார்த்தனின் ஆசி உரை! (75 வயதைக் கடந்தவர், 47 ஆண்டுகளாக கலாக்ஷேத்ரா கலாலயத்தில் முகாம். எத்தனை எத்தனை பாட்டும் பரதமும் நிகழ்ச்சிகளை கண்டு களித்திருப்பார்?!)

நாட்டிய மேதைகள் சித்ரா விஸ்வேஸ்வரன், சாவித்திரி, அம்பிகா புச், நரேந்திரன் உள்ளிட்ட கலைஞர்கள், பார்வையாளர்கள் வரிசையில் தலையசைத்து ஆமோதிக்க. மேடையில் இருந்த இரு பிரபலங்களின் வாழ்த்துரையில் அரங்கில் எழுந்த கைத்தட்டல் மகிழ்ச்சி – ஆரவாரம் அடங்க 60 நொடிகள் ஆனது!

இடம்: மயிலை பாரதிய வித்யா பவன் அரங்கம்.

ஆசான் முனைவர் சசிரேகா ராம்மோகன். இன்றைய தேதியில் முன் வரிசை நாட்டியாச்சாரியார்கள் வரிசையில் விரல் விட்டு என்னும் இடத்தில் இருப்பவர், ஆர்ப்பாட்டம் இல்லாதவர், பரமசாது குரு!

வாய்ப்பாட்டு முரளி பார்த்தசாரதி மெலடி மேஸ்ட்ரோ என்று அன்புடன் விமர்சிக்கப்பட்டார். முத்துக்குமாரின் புல்லாங்குழல் எழுப்பிய கானத்தால் செவி மடல்கள் சிலிர்த்ததாக சபையில் புளகாங்கிதம். வேத கிருஷ்ணன் மிருதங்கத்தில் விரல்களைப் பேச வைத்தவர் (ஒரு கட்டத்தில் பாடவும்..). அனந்த கிருஷ்ணன் – கால் நூற்றாண்டுகளைக் கடந்தும் தன் வித்வத்துவம் அடக்கமாய் ஒலிக்க, ஆடிய அதுல்யாவுக்கு அனுசரனையான வயலின். சசிரேகாவின் இனிமைக் குரலோடு இணை ந்த நட்டுவாங்கம் : நால்வர் கூட்டணியின் பக்க வாத்தியமும் அரங்கைப் பேச வைத்தது.

செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியில் 11ஆம் வகுப்பு மாணவி. கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் 97 % மதிப்பெண்கள், படிப்பிலும் புலி.

**5 வயதில் பரதம் பயில, 10 ஆண்டுகள் உருண்டோடிய நிலையில் அரங்கேற்றம். அவசரக்கோலத்தில் அள்ளித் தெளிக்கத் துடிக்காத பெற்றோர்கள், பொறுமையாய்த்தான் மேடை ஏற்றம் என்று புத்தி சொல்லும் ஆசான் சசிரேகா (ஏகப் பொருத்தம்).**

இந்த அனுபவ முதிர்ச்சிதான் அரங்கேற்ற மேடையில் கலைஞர்களின் பாராட்டுரைக்கு அஸ்திவாரம். உதட்டுக்கும் உள்ளத்துக்கும் இடைவெளி இல்லாத பேராசிரியர் ஜனார்த்தனன், கலைமாமணி விசாகா ஹரி இருவரின் புகழுரை: அதுல்யா கொடுத்து வைத்தவள்.

அத்திப் பூத்தாற் போல பரத மேடையில் வாழ்த்துரைக்கு வந்த விசாகா ஹரியின் விஷயத்தில் ஒரு பின் புலமும் உண்டு: அது – விசாகாவின் பரமார்த்த சிஷ்யை, அவரிடம் ஹரிகதா பயில்கிறார் அதுல்யா. பரதத்தில் பேச வைத்திருக்கும் அதுல்யாவின் ஹரி கதாவையும் கேட்க வேண்டுமே...? அவரிடம் அடகு வைத்த காதுகள் மீட்கப்படவே இல்லை என்று சொல்லும் பரவச நிலை தான் ஒவ்வொரு முறை கேட்கும் போதும். (மழலை மாறாத தமிழ், இளசு மாறாத முகம்)

சாந்த சொரூபி, அட்சர சுத்தமான உச்சரிப்பு, கொஞ்சும் மழலை சுகத்தோடு கெஞ்சும் தேன் குரல், லட்சண எழில் தோற்றம், அமரும் கோலமே வசீகரிக்கும், மனசு ஆனந்தத்தில் அவரை சுவீகரிக்கும்.

தவிர, கர்நாடக இசை பயல்கிறார், திவ்ய பிரபந்தம், தேசிக ஸ்தோத்திரம் கற்று அவையும் அத்துப்படி.. ஆற்றல்மிகு பேச்சாளர், விவாத மேடை உரையாடலில் உற்றுப் பார்க்க வைக்கும் திறமைசாலி, மாவட்ட – மாநில தேசிய அளவில் 200க்கும் மேற்பட்ட பரதப் போட்டிகளில் வெற்றியாளர்.

இறை வணக்கம் முடிந்த கையோடு புஷ்பாஞ்சலி. ஒளிக் கீற்று அதுல்யா மீது விழ, அவர் அடி எடுத்து அரங்கில் நுழைய அழகு தெய்வம் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்ததோ... சந்தோஷக் கேள்வி எழும்.

தஞ்சை நால்வரின் ஜதீஸ்வரம் முடிந்த நிலையில் அமரர் லால்குடி ஜெயராமனின் சாகித்தியம்: ""தேவர் முனிவர்...." பாடல். இதுவே அதுல்யாவின் வர்ணம்.

அடுத்து அன்னமாச்சாரியாரின்" முதுகரே யசோதா..." கீர்த்தனம். தொடர்ந்து ஜாவலி. மீண்டும் லால்குடி ஜெயராமனின் சாகித்தியத்தில் மனசைக் கொள்ளையடிக்கும் தில்லானா, நிறைவாக ஆண்டாளின் வாரணமாயிரம் பாடல். (ஆண்டாளே நேரில் தோன்றிய பக்தி நிலை. வாரே... வா)

"எனது குரு லால்குடி ஜெயராமனின் இரு பாடல்களுக்கு அதுல்யா ஆடி இருக்கிறார் (சண்முகப்பிரியா பத வர்ணம் , ரேவதி தில்லானா) லால்குடி மட்டும் உயிரோடு இருந்து முதல் வரிசையில் அமர்ந்து ஆட்டத்தை பார்த்திருந்தால்... உச்சி முகர்ந்திருப்பார் அதுல்யாவை.... ஒவ்வொரு சஞ்சாரி பாவமும் இருதயத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்தது. இது அரங்கேற்றமே இல்லை, அனுபவம் மிக்க ஒரு கலைஞரின் நாட்டியமாகத்தான் மிளிர்ந்தது" என்று நெகிழ்ந்து போய் சொன்னார் விசாகா ஹரி.

"சாமுத்திரிக்கா லட்சணம் அவளிடம் பூரணமாக. ஒரு நடனக் கலைஞருக்கு பக்தி, அபிநயம், தாள ஞானம் வேண்டும் .எல்லாம் அதுல்யாவிடம் தெரிந்தது, கலைக்காகவே பிறந்தவள் அவள் ..."என்று பெருமித(ம்) பூரிப்பில் வாயார வாழ்த்தினார்,

குட்டிக் கண்ணனை கொஞ்சிக் கொண்டே மெல்ல மெல்ல நகர்ந்து திரைக்குப் பின் மறையும் காட்சி வரை, அழகு அழகே !

மனசை அங்கும் இங்கும் எங்கும் அலைபாய விடாமல் இறுகக் கட்டிப்போட்டிருந்தது சசிரேகா ராம் மோகனின் பயிற்சியும், அதுல்யாவின் 10 ஆண்டு முயற்சியும் அந்த 110 நிமிடங்களுக்கு.

**"என்னவென்று சொல்வதம்மா ... வஞ்சி அவள் (அதுல்யா) பேரழகை, வசீகரிக்கும் அட–வழகை,**

**அந்தி மஞ்சள் நிறத்தவளை, பரதத்தில் கால் பதித்தவளை, என்னவென்று சொல்வேனோ, எப்படித்தான் சொல்வேனோ...? பண்பாடு பாடி வரும் சின்ன விழி மீன்களும், பொன்னூஞ்சல் ஆடிவரும் கன்னிக் கருகூந்தலும், நீரோடை போலவே நாளும் ஆடிப் பாடி ஓடுவாள்...''**

**வீ. ராம்ஜி**

**IN THE COURT OF II ASSISTANT CITY CIVIL JUDGE, AT CHENNAI**
**I.A.No. 3 of 2022**
**in**
**I.A.No. 1715 of 2009**
**In**
**O. S. No. 5760 of 1991**

Mrs. Angammal (Deceased), and 16 others ... Petitioners

-vs-

1. Mrs. Rajammal (Deceased) and 13 others ... Respondents

To:
Soundariya Anandan Selvi
All residing at No.36, Bazaar Street, Virugambakkam, Chennai - 600 092.
...Respondents 5, 6 & 7

Please take notice that the above case came up for hearing on 13.07.2023 before the Hon'ble II Asst City Civil Court at Chennai and the Hon'ble Judge has ordered notice to you returnable by 07.08.2023.

Ensure your presence in person or through your counsel before the Hon'ble II Asst City Civil at Chennai on 07.08.2023 at 10.30 am, failing which the case will be decided in your absence.

DAVID TYAGARAJ
Counsel for Petitioners

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**C.M.P.No.18636 of 2019**
**in**
**A.S.SR.No.105646 of 2019**

Rajasekaran
Son of Late. Balasundaram
D.No. 152, Main Road
Lawspet, Puducherry- 605 008.
...Petitioner

-Vs-

Govindan
Son of Rajamanickam Gramani
47, First Cluny Street,
Rajaji Nagar
Puducherry -605 008 & 11 Ors.,
...Respondents

To
1. Rani, Wife of Late. Rajendiran
2. Vijayalakshmi
D/o Late. Rajendiran
3. Ezhilarasi
D/o Late. Rajendiran
4. Balaji
Son of Late. Rajendiran
All are residing at
D.No. 152, Main Road
Lawspet, Puducherry - 605 008
....Respondents 7 to 10
5. Revathy
W/o Kathiravan
D/o Late. Balasundaram
D.No. 496, Vazhudavur Road
Muthirapalayam
Puducherry- 605 009
...12th Respondent

Please take notice that the above Civil Miscellaneous Petition in First Appeal bearing A.S.SR. No.105646 of 2019 filed by Rajasekaran against you stands posted to 10.08.2023. You are required to enter appearance in the said matter on the said date either in person or through your advocate at 10:30 A.M before Hon'ble High Court of Madras failing which the said case will be decided in your absence.

S.Subramanian
S.Sudarshan
Counsel for Appellant/Petitioner

**கும்பத் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்**

CI N: L65991TN1993PLCO24433

கும்பத் காம்ப்ளக்ஸ், 5வது தளம், 29, ரத்தன் பஜார், பார்க் டவுன், சென்னை–600 003.

Website: www.kumbhatfinancialserviceslimited.co

**மின் வாக்களிப்பு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு**

அன்புள்ள உறுப்பினர்களே,

1. வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்காக விநியோகிக்கப்படும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வணிகத்தை பரிவர்த்தனை செய்ய நிறுவனத்தின் 30வது வருடாந்திர பொதுக் கூட்டம் வியாழக்கிழமை, 17 ஆகஸ்ட், 2023 அன்று காலை இந்திய நேரப்படி 10.00 மணிக்கு காணொலி காட்சி ("VC")/ பிற ஆடியோ காட்சி முறை ("OAVM) மூலம் கூட்டப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. கோவிட்–19 உலகளாவிய தொற்றுநோயால் ஏற்படும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பெருநிறுவன விவகார அமைச்சகத்தின் (எம்சிஏ) ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 17/2020 மற்றும் மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2020ன் படி வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, நிறுவனங்களின் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும் என்பது உங்களுக்குத் தெரியும். பெருநிறுவன விவகார அமைச்சகம் (எம்சிஏ) கோப்பு எண். கொள்கை17/57/2021–CL–MCA தேதி 28.12.2022 அன்று ஒரு தெளிவுபடுத்தலை வெளியிட்டுள்ளது (28.12.2022 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 10/2022 மற்றும் பொதுச் சுற்றறிக்கை எண். 11/ 2022) 2023 ஆம் ஆண்டிற்கான நிறுவனங்களின் வருடாந்திர பொதுக் கூட்டங்கள் (ஏஜிஎம்) மற்றும் அசாதாரண பொதுக் கூட்டங்கள் (இஜிஎம்) ஆகியவற்றை செப்டம்பர் 30, 2023 வரை காணொலி காட்சி ("VC")/ பிற ஆடியோ காட்சி முறை ("OAVM") மூலம் நடத்த அனுமதிக்கிறது. மேலும், 28.12.2022 தேதியிட்ட எம்சிஏ சுற்றறிக்கையை மேற்கோள் காட்டி, செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் (செபி) 05.01.2023 தேதியிட்ட SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 என்ற சுற்றறிக்கையின்படி ஆண்டு அறிக்கைகளின் காகிதத்தில் அச்சிட்ட புத்தக வடிவிலான ஹார்டு நகல்களை அனுப்புதலுக்கு தளர்வை செப்டம்பர் 2023 வரை நீட்டித்துள்ளது. வரவிருக்கும் வருடாந்திர பொதுக்கூட்டம் இவ்வாறு காணொலி காட்சி ("VC")/ பிற ஆடியோ காட்சி முறை ("OAVM) மூலம் நடைபெறும். எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் தொடர்ந்து வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம்.

2. மேலே குறிப்பிட்டுள்ள எம்சிஏ சுற்றறிக்கை(கள்) மற்றும் செபி சுற்றறிக்கைக்கு இணங்க, நிறுவனம்/ஆர்டிஏ அல்லது அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் ("டிபி") மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் ("வருடாந்திர அறிக்கை") உட்பட 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2023 ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். உறுப்பினர்கள் VC/OAVM வசதி மூலம் மட்டுமே 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேரலாம் மற்றும் பங்கேற்கலாம். 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேர்வதற்கான வழிமுறைகள் மற்றும் 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான தொலைதூர மின் வாக்களிப்பில் பங்கேற்பதற்கான வழிமுறைகள் 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 103 ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

3. 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளத்தில் அதாவது www.kumbhatfinancialserviceslimited.com மற்றும் நிறுவனத்தின் சமபங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளின் இணையதளத்தில் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டில் கிடைக்கும்.

4. தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனம்/ஆர்டிஏ–ல் பதிவு செய்யாத காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை மற்றும்/அல்லது 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேர்வதற்கான உள்நுழைவு விவரங்களை தொலைதூர மின்வாக்களிப்பு உட்பட VC/OAVM வசதி மூலம் பெறலாம். இதற்காக cs@kumbhatfinancialserviceslimited.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை அனுப்ப வேண்டும்.

ஏ. உங்கள் பெயர், ஃபோலியோ எண் மற்றும் முழு முகவரியைக் குறிப்பிடும் மின்னஞ்சல்

பி. பங்குச் சான்றிதழின் நகல் (முன் மற்றும் பின்)

சி. பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்; மற்றும்

டி. நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் முகவரிக்கு ஆதரவாக எந்தவொரு ஆவணத்தின் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் ஐடி, பாஸ்போர்ட் போன்றவை) சுயசான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்.

5. காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய விவரங்களை கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் என்ற இணைய தொகுதி https://investors.cameoindia.com மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.இதில் பங்குதாரர்கள் உள்நுழைந்து மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை அவர்கள் பங்குகளை வைத்திருக்கும் போலியோ எண்ணுக்கு எதிராக பதிவு செய்யலாம்.

6. டிமேட் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பிக்கலாம்.

7. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி, வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் பான் ஆகியவற்றை நிறுவனம்/ஆர்டிஏ/டெபாசிட்டரி பங்கேற்பாளருடன் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இது நிறுவனத்தி டமிருந்து வருடாந்திர அறிக்கை, ஈவுத்தொகை மற்றும் வேறு ஏதேனும் பரிசீலனை மற்றும் பிற தகவல் தொடர்புகளின் ரசீதை உறுதி செய்ய உதவும்.

8. தொலைதூர மின்வாக்களிப்பு மற்றும் புத்தக மூடல் தகவல் பற்றிய விவரங்கள்: நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 108, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 விதி 20 மற்றும் திருத்தப்பட்ட நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்த விதிகள், 2015 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44க்கு இணங்க, உறுப்பினர்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கு தொலைதூர மின் வாக்களிப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. தொலைதூர மின் வாக்களிப்பு வசதியை வழங்குவதற்கு சிடிஎஸ்எல் (சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட்) சேவைகளை நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது. தொலைதூர மின் வாக்களிப்பின் விவரங்கள் கீழே உள்ளன.

| வ.எண் | விவரங்கள் |
|---|---|
| 1 | மின்னணு முறையில் வாக்குப்பதிவு ஆகஸ்ட் 14, 2023 முதல் இந்திய நேரப்படி காலை 9:00 மணிக்கு தொடங்கும். |
| 2 | மின்னணு முறையில் வாக்குப்பதிவு ஆகஸ்ட் 16, 2023 அன்று இந்திய நேரப்படி மாலை 5:00 மணிக்கு முடிவடையும். |
| 3 | வாக்களிக்கும் காலத்தின் முடிவில், அதாவது ஆகஸ்ட் 16, 2023 அன்று இந்திய நேரப்படி மாலை 5:00 மணிக்குப் பிறகு வாக்களிப்பது அனுமதிக்கப்படாது. |
| 4 | கட்ஆப் தேதி: 10.08.2023. |
| 5 | நிறுவனங்கள் சட்டம், 1956, பிரிவு 154 மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 91, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 10 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதி 2015ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அங்கு செய்யப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் 11 ஆகஸ்ட், 2023 முதல் ஆகஸ்ட் 17, 2023 வரை (இரண்டு நாட்களையும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. |

மேலே உள்ள தகவல் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைகளுக்காகவும், எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைக்கு இணங்கவும் வெளியிடப்படுகின்றன.

கும்பத் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்டிற்காக
சஞ்சய் கும்பத்
நிர்வாக இயக்குனர்
DIN: 03077193


தேதி: 17.07.2023
இடம்:சென்னை

# Ram Charan's 'Rangasthalam' breaks all records with Japan Release

Ram Charan holds a special place in the heart of the Japanese people and the response to the release of Rangasthalam is a true testament of this statement !

One of the highest grossing Telugu films, "Rangasthalam" received critical acclaim for its performances, storytelling, direction, and music. The film was a commercial success, becoming one of the highest-grossing Telugu films of all time. The film received widespread acclaim and was hailed as a blockbuster. It enjoyed a long theatrical run and attracted audiences in large numbers.

The cult movie was released in Japan on Friday, 14th July and netted 2.5 million yen



in 70 screens from Day 1 itself. Speaking on the Japan release of Rangasthalam, Anbarasi Duraipandian CEO, SPACEBOX Japan affirms that, "We SPACEBOX released Rangasthalam movie in japan about 50 screens and we are planning to release it in many theaters in the coming weeks. Ram Charan holds a special place in the heart of the Japanese people, and the reaction to the film proves it. It makes us extremely proud to bring a film like Rangasthalam to the audiences in Japan. The film is truly a cinematic masterpiece and it is an honour for SPACEBOX to be able to release it here!"



# Goa bars entry to waterfalls, wildlife sanctuaries to ensure safety of travellers

Goa, July 17-

The forest department of Goa has banned the entry of people to waterfalls within wildlife sanctuaries. Two people lost their lives in South Goa recently, and the ban will be in place as of now to ensure the safety of travellers.

Acting in line with the order issued, Chief Wildlife Warden Umakant prohibited the entry of people inside all wildlife sanctuaries and waterfalls until further orders. Also, as per the reports, due to continuous heavy rainfall in the state and high-water current rivers in forest areas, it's not deemed safe to visit the waterfalls now.

Mostly, during this time, picnic goers throng waterfalls in Goa. It was the same this year and social media was flooded with complaints of overcrowding and misbehaviour at popular waterfalls, which prompted requests to the forest department and the government to regulate entry into the sanctuaries, especially on weekends.

Referring to the ban, state Forest Minister Vishwajit Rane added that the department will review the ban after ensuring it has a mechanism in place to ensure that the flow of picnickers and tourists to the waterfalls are checked. He further added that the complaints would be taken into consideration and that regulations would be imposed so that people don't face danger of losing their lives, and enjoy their trip without any hassle.

Goa is home to five wildlife sanctuaries, Bhagwan Mahaveer Sanctuary and Mollem National Park, Bondla Wildlife Sanctuary, Cotigao Wildlife Sanctuary, Mhadei Wildlife Sanctuary and Netravali Wildlife Sanctuary. The officials added that during the monsoon season, tourists and locals flock to some seasonal waterfalls and since most beaches remain inaccessible during monsoon, tourists and locals often trek deep into the protected forest areas and into the hinterland for an adventure.

As such, the decision to prohibit entry has been put into place as a precautionary measure in light of the recent incident.

# Vishal and Hari unite for mass action entertainer

Following the success of their two previous outings, Thamira Bharani and Poojai, actor-director duo Vishal and Hari have joined hands once again for yet another commercial entertainer. Touted as an out-and-out mass action entertainer, this highly-anticipated film is being produced on Stone Bench Films and Zee Studios South banners in association with Invenio Origin banner.

Stonebench Films and Zee Studios South are jointly producing the yet-



to-be-titled film on a huge budget, by joining hands with Invenio Origin's Alankar Pandian and Kalyan Subramaniam.

Director Hari, who is an expert at making engaging racy films, and actor Vishal, who is known for his action-packed performances, have joined forces after their successful previous outings, 'Poojai' and 'Thaamirabharani', and the new film will have leading actors and technicians on board.

Speaking about the film, Producer Kaarthekeyen Santhanam said, "The combination of Vishal and Hari is an exciting one for us as producers, and I'm sure that the film will satisfy all sections of the audience."

Cinematography for the movie is by M. Sukumar, editing by T.S. Jay, art direction by Kali. Premkumar, stunts by Dhilip Subbarayan, and lyrics by Viveka.


# Kashmir launches trekking expeditions

Srinagar, July 17-

Kashmir recently set off a series of interesting trekking expeditions in a move to boost adventure tourism. As per the reports, the selected alpine trails for these expeditions, include the well-known Tarsar Marsar Trek, Kashmir Great Lakes Trek, as well as Gurez and Boadpathri. These expeditions have been launched to offer people an unmatched experience amid the scenic beauty of Kashmir. Referring to this, Kashmir Tourism Department added that these treks will lead to a new thrill for visitors.

Director of Tourism Raja Yaqoob stressed the significance of adventure tourism to enhance the overall tourist experience in Kashmir. He further added that adventure tourism is their main focus and that they are dedicated to ensure that tourists explore and indulge in thrilling activities while enjoying the natural beauty of Kashmir.

The Director of Tourism further added that as part of the ongoing initiatives, J&K Tourism is actively promoting 75 new trekking routes and that efforts are underway to boost



aero adventures, offering visitors a wide range of options to explore the region.

# Raghava Lawrence, Innasi Pandiyan team up for action thriller

Five Star Creations' Kathiresan recently produced and directed Raghava Lawrence-starrer 'Rudhran' which was a huge success. Similarly, 'Diary' produced by Kathiresan and directed by Innasi Pandiyan starring Arulnidhi was also a hit. Following these ventures, producer Kathiresan has reunited with Raghava Lawrence and Innasi Pandiyan.

Raghava Lawrence's brother Elviin is playing the lead role in this film, which is set to be a fast-paced action thriller. Raghava Lawrence is playing a very important role. The film is being made simultaneously in Tamil, Telugu and Hindi.

Popular Telugu actress Vaishali Raj is making her debut in the Tamil industry as a heroine through this film. The shoot has started today and is scheduled to continue in Chennai, Tenkasi, and Hyderabad.

Speaking about the film, Director Innasi Pandiyan said, "It is a full-length action thriller.



I was about to direct this story as my first film, but due to some reasons it was not possible. So, I am now directing this as my second film. Thanks to producer Kathiresan for his continuous support."

R. Sundararajan, Chaams, Shiva Shara, KPY Vinoth, VJ Thanikai ana Sendraayan are playing important roles in this movie.

Sam CS will score music for the film, while Aravinnd Singh, the cinematographer of films including 'Demonte Colony' and 'Diary', is handling the cinematography. Vadivel Vimalraj handles the editing and Phantom Pradeep is responsible for the stunts. Gnanakaravel is penning lyrics for the songs and the dialogues of the film are written jointly by Gnanakaravel and director Innasi Pandiyan. Art direction is by Raju and Costume designing is by Sher Ali.

The shooting of Raghava Lawrence and her brother Elviin-starrer movie directed by Innasi Pandiyan and produced by Five Star Creations' Kathiresan has started today.




# Actor Shanmuga Pandian's next goes on floors

Vijayakant's son Shanmuga Pandian's is tentatively titled Production 1, announced that the film has commenced filming with a pooja ceremony. The pooja was attended by Premalatha Vijaykanth, Shanmuga's mother.

Director U. Anbu said, "The film is a high-octane action entertainer set against the backdrop of the forest and elephants. It's about the bonding between an elephant and a human, and the major conflict is based on a real incident that happened on the Orissa border. "

He clarifies that even though the film is centred around elephants, it will be different from films like Kumki. "Shanmuga Pandian will not be playing a mahout, but will be seen as a normal person who lives amidst nature," he states.

He also adds that every scene in the film will feature minimum four to five elephants and major sequences will have 20 elephants. "We also have a huge team to take care of the CG works. The film will be shot in the interior forests of Orissa, Thailand and Kerala," Anbu says.


## TO WHOMSOEVER IT MAY CONCERN

This is to inform that my clients Mr. Reuben Antony and Mr. Caleb Eugene, both sons of Late G.Vincent Raj, are the owners of the property bearing Door No.13, Rajeshwari Colony 2nd Street, Paul Wells Road, St. Thomas Mount, Alandur Taluk, Kancheepuram District, and the same was devolved upon them, after the demise of their father Mr. G.Vincent Raj.

The said G.Vincent Raj had purchased the schedule property under a registered Sale Deed dated 22.12.1999, vide Document No.1550 of 1999, SRO, Saidapet. The original Sale Deed was found lost on 28.11.2022, after the demise of Client's father G.Vincent Raj, who died on 30.05.2018. Any finders will duly be rewarded. My client's father did not hand-over the said Sale Deed for any purposes to any third party. Any claim after 15 days of this publication, cannot have any claim.

**SCHEDULE OF PROPERTY**

The property is located @ Plot No.13, Palwell Road, 1/51-G, Rajeswari Colony, St.Thomas Mount, Chennai – 600 016, in Survey No.441/1 , GLR No.220, measuring an extent of 3,630 Sq. Ft., SRO, Saidapet (Joint-II).

**N.KARUNANIDHI - ADVOCATE**
**6/35, Gandhi Road, West Tambaram,**
**Chennai - 600045.**
**Ph: 98840 26400**

## PUBLIC NOTICE

My clients namely J. Pavithra w/o Gunasekeran aged about 37, residing at No. 1187, 2nd Street, West Indira Nagar, Senthurpuram, Kattupakkam,Chennai-600056 had lost the Registered Original Documents at 14-04-23 when they were shifting the house for the convenience of their children's studies. Survey Nos: 131, Document No is 5027/1995 total extend area of 1,254 Sqft. Situated at Kattupakkam Village Registered in Kundrathur Register Office.
If anyone found it Kindly hand over to my Client or to me and it will not legally bind my Client.If any transactions done by anyone with regard to said Documents.

**A. SAMPATHKUMAR**
Advocate
No:24 Padmavathi Nagar,
Poonamallee, Chennai-56

## MISSING

**My original Sale Deed Document No, 1775/1999, SRO. Ponneri, Survey No. 53/4A & 53/4B, Measuring an extent of 2100sqft, Plot situated at Annai Rathinamani Nagar, Thiruvallavoyal village, Ponneri Taluk, Thiruvallur District. On 29.06.2023 around 9.00 pm while I am taking a xerox near Mittanamallee Market, the above original documents are missing, but I could not find the same, If found, Please Contact.**
**Thirumathi. Dhanalakshmi.S**
**9841696560**

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
(Testamentary and Intestate Jurisdiction)
O.P. No. 598 of 2022

In the matter of the Indian Succession Act XXXIX of 1925 and In the matter of the Last Will & Testament of

Late **Mr. N.K.JANAKIRAM** (Deceased)
K.Venkatraman,
S/o. Late Shri K.V. Krishnamurthy
Unit No.709 & 710, 7th Floor, Beta Wing,
"Raheja Towers, New No.177,
Anna Salai, Chennai.600 002.
...Petitioner
-Versus-
1. Mr. Krishna Rajendran Jayanthilal
S/o. Mr. S.Jayanthilal,
New No.37, Old No.18, Kamaraj Avenue,
2nd Street, Adyar, Chennai 600 020
2. Mrs.Gowthami W/o. Mr.Krishnamurthy
No.33, Nethaji Street, Ayappa Nagar,
Trichy 620 021. ...Respondents

All persons claiming to have any interest in the estate of the above named Late Mr. N.K.Janakiraman, who was temporarily residing at New No.37, Old No.18, Kamaraj Avenue, 2nd Street, Adyar, Chennai 600 020, and died on 26.04.2022, are hereby cited to come and see the proceedings before the Learned Master, sitting in the Original Side of High Court of Judicature at Madras on 25.07.2023 at 10.30 a.m., and requested to file their objections, if they think fit before the grant of Letters of Administration.

Dated at Chennai this the 10 th day of July 2023
M/s.Ram & Rajan & Associates advocates
T.K.Ram kumar & R.S.Varadarajan &
N.Swaminathan
#12/42, Pelathope, Mylapore,
Chennai-600 004
Counsel for Petitioner

Govindaraj Balakrishnan
The Assistant Registrar
Original Side High Court, Chennai

## KUMBHAT FINANCIAL SERVICES LIMITED

CIN: L65991TN1993PLC024433
Kumbhat Complex, 5th Floor, 29, Rattan Bazaar, Park Town, Chennai – 600 003.
Website: www.kumbhatfinancialserviceslimited.com

**NOTICE OF EVOTING & BOOK CLOSURE**

Dear Members,

1. Notice is hereby given that the 30th Annual General Meeting of the Company will be convened at 10.00 a.m. IST, on Thursday, 17th August, 2023 through video conferencing ("VC") / Other Audio Visual Means ("OAVM") facility to transact the business as set out in the notice which will be circulated for convening the AGM. As you are aware, in view of the situation arising due to COVID-19 global pandemic, the general meetings of the companies shall be conducted as per the guidelines issued by the Ministry of Corporate Affairs (MCA) vide Circular No. 14/2020 dated April 8, 2020, Circular No. 17/2020 dated April 13, 2020 and Circular No.20/2020 dated May 05, 2020. The Ministry of Corporate Affairs (MCA) - vide file No. Policy-17/57/2021-CL-MCA dated 28.12.2022 has issued a clarification (through its General Circular No. 10/2022 and General Circular No. 11/2022, dated 28.12.2022) allowing the conduct of annual general meetings (AGM) and extra ordinary general meetings (EGM) of companies due for the year 2023, through video conference (VC) or other audio-visual means (OAVM) mode till September 30, 2023. Further the Securities & Exchange Board of India (SEBI), citing MCA circular dated 28.12.2022 have vide their circular SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 dated 05.01.2023 extended the relaxation up to September,2023 of sending hard copies of annual reports. The forthcoming AGM will thus be held through video conferencing (VC) or other audiovisual means (OAVM). Hence, Members can attend and participate in the ensuing AGM through VC/OAVM.
2. The Notice of the 30th AGM and the Annual Report for the year 2023, including the Financial Statements for the year ended 31st March, 2023 ("Annual Report") will be sent only by e-mail to all those members, whose e-mail addresses are registered with the Company / RTA or with their respective Depository Participants ("DP"), in accordance with the MCA Circular(s) and the SEBI Circular as mentioned above. Members can join and participate in the 30th AGM through VC/OAVM facility only. The instructions for joining the 30th AGM and the manner of participation in the remote e-voting for the 30th AGM are provided in the Notice of the 30th AGM. Members participating through the VC/OAVM facility shall be counted for the purpose of reckoning the quorum under section 103 of the Companies Act, 2013.
3. Notice of the 30th AGM and the Annual Report will be made available on the website of the Company i.e., www.kumbhatfinancialserviceslimited.com and the website of Stock Exchanges in which the Company's equity shares are listed i.e., BSE Limited
4. Members holding shares in physical form who have not registered their e-mail addresses with the Company / RTA can obtain Notice of the 30th AGM, Annual Report and / or login details for joining the 30th AGM through VC / OAVM facility including remote e-voting, by sending scanned copy of the following documents by e-mail to cs@kumbhatfinancialserviceslimited.com
   a. Request e-mail mentioning your name, folio number and complete address
   b. Copy of the Share Certificate (Front & Back)
   c. Self-attested scanned copy of the PAN Card; and
   d. Self-attested scanned copy of any document (such as, Aadhaar card, Driving License, Voter 'ID, Passport) in support of the address of the members as registered with the company.
5. Members who are holding shares in physical form are requested to intimate such details to Cameo Corporate Services Limited, through web module https://investors.cameoindia.com, wherein the shareholders can log in and register the Email ID and mobile number against the folio number in which they hold shares.
6. Members holding shares in demat form can update their e-mail address & bank account details by submitting a request to the concerned Depository Participant.
7. Considering the above, we urge the shareholders to update their email ID, Bank Account details & PAN with the Company / RTA / Depository Participant to ensure receipt of the Annual Report, dividend and/or any other consideration and other communications from the Company.
8. Details of remote e-voting and book closure intimation : Pursuant to the provisions of Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules 2014, as amended by the Companies (Management and Administration) Amendment Rules, 2015 and Regulation 44 of the SEBI (Listing Obligation and Disclosure Requirement) Regulations 2015, remote e-voting facility has been made available to the members to exercise their right to vote. The Company has engaged the services of CDSL (Central Depository Services Limited) to provide remote e-voting facility. The details of the remote e-voting are as under

| Serial No. | Particulars |
|---|---|
| 1 | The voting through electronic means will commence from 14th August, 2023 at 9:00 a.m. IST |
| 2 | The voting through electronic means will end on 16th August, 2023 at 5:00 p.m. IST |
| 3 | The voting shall not be allowed beyond the end of the voting time period i.e. 16th August, 2023 after 5:00 p.m. IST |
| 4 | Cut-off-date: 10.08.2023. |
| 5 | Pursuant to Section 154 of the Companies Act, 1956 and Section 91 of the Companies Act, 2013 read with rule 10 of the Companies (Management and Administration) Rules 2014 and the applicable provisions of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 and the amendments made there under, the notice is hereby given that Register of members and Share transfer books will remain closed from 11th August, 2023 to 17th August, 2023 (both days inclusive) for the purpose of AGM. |

The above information is being issued for the information and benefit of all the members of the Company and in Compliance with the MCA Circular(s) and SEBI Circular.

For Kumbhat Financial Services Limited,
SANJAY KUMBHAT
Managing Director
DIN : 03077193

Date : 17.07.2023
Place : Chennai